முருகப்பெருமான் துணை

**மகான் தூர்வாசமுனிவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.03.2024**, புதன்கிழமை

1. சன்மார்க்க சங்கம் நிறுவி
சற்குருவாய் சகலருக்கும் ஞானம்
துன்பம் விலக அருளுகின்ற
தேசிகனே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது சால் திங்கள்
குறைவிலா மூவேழீர் திகதி புந்திவாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 23 ம் நாள், 06.03.2024, புதன்கிழமை)
அறிவிப்பேன் துல்லிய ஆசி
ஆற்றல்பட தூர்வாசமுனிவர் யானும்
3. யானுரைப்பேன் உலக நலம்பெற
உயர்நெறி காட்டும் அரங்கன்
மறைபோற்ற மக்களை மீட்க
மகா உபதேசம் அருளிவர
4. அருளுகின்ற ஞான நெறியை
ஆறுமுகனார் ஆசியாக ஏற்று
வரமென நம்பிக்கை வைத்து
வணங்கித் தொடரவே மாற்றம்
5. மாற்றம் தானாக அவரவர்க்கும்
மனபலமாக மகா சக்தியாகி
ஆற்றல் கூடி அறிவுத் தெளிவு
அனைத்துயிர் மேலும் அன்பு கொண்டு
6. கொண்டுமே உயிர்வதை நீக்கி
குறைவிலா தயவுபட நடந்து
தொண்டு வழி வாழ்க்கை முறையை
தொடர் சேவையாக மாற்றி
7. மாற்றியே அரங்கமகான் காட்டும்
மரணம் மறுமை கடக்கும்
ஆற்றல்கூடி மனிதன் எனும்
அதிநிலை மேலே மகானாகவே

8. ஆகவே ஆற்றல் கூட்டி
அவதாரம் பிறவிப் பயன் எனும்
வகையான சூட்சுமம் யாவும்
விளங்கியே மேல்நிலை அடைவர்

9. அடையவே தொடர்ந்து நிகழும்
அனைவருக்குமான பிறப்பு இறப்பு
அடைவை கடந்து நிலைத்திடும்
அழியாமை தனை நோக்கி

10. நோக்கியே சிறந்து வாழ்ந்து
நிலவுலகில் எவ்வுயிர்க்குமே
ஆக்கம் தந்து காக்கின்ற
அரங்கன் ஆறுமுகன் சக்தியாக

11. ஆகவே ஆற்றல் பெருகி
அரங்கன் வழி வருபவர்கள்
மகான்களாக மண்ணுலகை மாற்றுவர்
மொழிந்திட்ட துல்லிய ஆசி முற்றே

–சுபம்–